# கொழும்புப் பல்கலைக்கழகம் - இலங்கை

கலைப்பீடம்

**மூன்றாம் வருட சிறப்புக் கலைமாணிப் பரீட்சை (புவியியல்) – பகுதி II**

இரண்டாம் பருவம் - இறுதித் தவணைப் பரீட்சை - 2018

## GYG 3264: நகரச் சூழல் மற்றும் முகாமைத்துவம்

நேரம்: 02 மணித்தியாலங்கள்

ஒவ்வொரு பகுதியிலிருந்தும் ஒரு வினாவையேனும் தெரிவு செய்து எல்லாமாக **மூன்று** (03) வினாக்களுக்கு விடையளிக்குக.

---

### பகுதி I

(1)

i) நகர மாசாக்கச் சுட்டெண் குறிகாட்டிகளைக் குறிப்பிடுக.

(02 புள்ளிகள்)

ii) நீர் மாசுபடுதலுக்கான காரணங்களை ஆராய்க.

(03 புள்ளிகள்)

iii) அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் நகர நீர் மாசடைதலை இழிவளவாக்குவதற்கு மேற்கொள்ளக் கூடிய சாத்தியமான தீர்வுகளைக் குறிப்பிட்ட உதாரணங்களுடன் பரிசீலிக்குக.

(15 புள்ளிகள்)

(2)

i) “நகரின் ஒழுங்கற்ற பரம்பல்” (Urban Sprawl) எனும் பதத்தினை வரையறை செய்க.

(03 புள்ளிகள்)

ii) நகரத்தின் ஒழுங்கற்ற பரவுதலைத் தீர்மானிக்கும் காரணிகளைச் சுருக்கமாக விளக்குக

(05 புள்ளிகள்)

iii) நகர நிலப்பயன்பாட்டு மாற்றங்களுடன் (Land use change) தொடர்பான பிரச்சினைகளை உதாரணங்களுடன் பரிசீலிக்குக.

(12 புள்ளிகள்)

(3)

i) நகர்ப் பகுதியொன்றின் திறந்த வெளிகளில் வீசப்படும் நகரக்கழிவுகளினால் இயற்கைச் சூழலில் ஏற்படும் தாக்கங்களைச் சுருக்கமாகக் குறிப்பிடுக.

(05 புள்ளிகள்)

ii) நகரச் சூழல் மாசடைதலினால் ஏற்படும் சமூகத் தாக்கங்களைப் பொருத்தமான உதாரணங்களுடன் பரிசீலிக்குக.

(15 புள்ளிகள்)

## பகுதி II

(4)

i) பல் மூலக்கரு மாதிரியின் (Multiple Nuclei Model) அடிப்படையில் நகர வாழிட வலயங்களை அடையாளம் செய்க.

(03 புள்ளிகள்)

ii) மேலே வினா இல.4 (i) இல் உம்மால் குறிப்பிடப்பட்ட வாழிட வலயங்களில் காணப்படும் வேறுபாடுகளைச் சுருக்கமாக விளக்குக.

(05 புள்ளிகள்)

iii) நகராக்கச் செயன்முறையில் கைத்தொழில் விருத்தியினால் ஏற்படும் தாக்கங்களைத் தென்கிழக்காசிய நாடுகளின் நிலப்பயன்பாட்டு மாதிரியிலிருந்து உதாரணங்களைப் பயன்படுத்திப் பரிசீலிக்குக.

(12 புள்ளிகள்)

(5)

i) நகர முகாமைத்துவத்தில் காணப்படும் பல்வேறு பங்குதாரர்களினதும் (Stakeholders) வகிபங்கினைச் சுருக்கமாக ஆராய்க.

(05 புள்ளிகள்)

ii) நிலைபேண் நகரங்கள் மற்றும் சமூகங்களின் நிலைபேண் இலக்குகளை அடைந்து கொள்வதில் நிலைபேண் அபிவிருத்தி இலக்குகள் (SDGs) எத்தகைய முக்கியத்துவத்தினைக் கொண்டிருக்கின்றது என்பதனை ஆராய்க.

(15 புள்ளிகள்)

(6)

i) "நீலப்-பசுமை நகரம்" (Blue-Green City) என்னும் பதத்தினை வரையறை செய்க.

(03 புள்ளிகள்)

ii) நீலப்-பசுமை நகரத்தினை உருவாக்குவதற்கு அமுல்படுத்தக் கூடிய உபாயங்களைச் சுருக்கமாக விளக்குக.

(05 புள்ளிகள்)

iii) "நிலைபேண் நகர எதிர்காலத்திற்கான ஈரநிலங்கள் (Wetland for a Sustainable Urban Future)" என்பது 2018 இல் உலக ஈரநிலங்களின் தினம் என்னும் கருப் பொருளில் ராம்சார் சமவாயத்தினால் பிரகடனம் செய்யப்பட்டது. மேற்குறிப்பிட்ட கருப்பொருளினை உதாரணங்களுடன் ஆராய்க.

(12 புள்ளிகள்)